யாழ் நகர சபை நூலகம் / யாழ்ப்பாணம் (stamp)

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 20 செவ்வாய்க்கிழமை (02 06-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 187

## 'சுழல் காற்று' ஓய்ந்ததாம்!

கொழும்பு, ஜூன் 2

பலாலி இராணுவச் சுற்றாடல் பகுதியில் ஸ்ரீலங்காப் படையினர் கடந்த நான்கு நாட்களாக மேற்கொண்ட ''சுழல் காற்று'' இராணுவ நடவடிக்கை நேற்று முன்தினத்துடன் முடிவடைந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்று இச் செய்தியை வெளியிட்டுள்ளது.

[உ-5]

## இதுவரையில் 76 படையினர் மரணம்

கடந்த சில தினங்களாக வடக்கு, கிழக்கில் நடைபெற்று வரும் சண்டைகளில் 76 படையினர் உயிரிழந்திருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஆஸ்திரேலியா வானொலி அறிவித்தது.

[உ-10]

## வலி. வடக்கில் பலரை காணவில்லை

வலி. வடக்கு பகுதியில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பகுதிகளில் பலர் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொல்லன்கலட்டி பகுதியில் சித்தசுவாதீனமற்ற இருவர் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும், மாவிட்டபுரத்தில் உள்ள தோட்டங்களுக்கு நீர் பாய்ச்ச சென்ற மூவரை காணவில்லை என்றும் உறவினர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது

[உ-3]

## கீரிமலையில் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், ஜூன் 2

நேற்றுக்காலை 9-30 மணியளவில் கீரிமலை - சேந்தாங்குளம் பகுதியில் இரு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின. ஏற்பட்ட சேதங்கள் பற்றிய விவரம் கிடைக்கவில்லை.

[உ-162]

## பலாலி மோதலில் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

நேற்று முன்தினம் பலாலியிலிருந்து முன்னேற முயன்ற படையினருடன் நடந்த மோதலில் முகிலன் [பாலசிதம்பர நேசன் தேவராஜன் —மானிப்பாய் தெற்கு, கல்லுண்டாய்] என்ற போராளி வீரமரணமடைந்தார்.

(உ-5)

# மன்னாரில் அதிரடி! 6 ராணுவத்தினர் பலி!!

## பெருமளவு ஆயுதங்களும் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 2

மன்னார் - மாந்தைப் பகுதியில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் உயிரிழந்தனர். அவர்களிடமிருந்து ஆறு நவீனரகத் துப்பாக்கிகள் உட்பட பெருமளவு இராணுவத் தளபாடங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

மாந்தை இராணுவ முகாமிலிருந்து காலை 5-30 மணியளவில் வீதித் தடைகளை அகற்றிக்கொண்டு — அடம்பன் வழியாக — சுமார் 350 யார் தூரம் முன்னேறி வந்த படையினர் மீதே இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

(2ஆம் பக்கம் பார்க்க)

## மீட்கப்பட்ட ஆயுதங்களின் விவரம்

மன்னார் மாந்தையில் நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின்போது புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு:—

- ★ ஏ. கே. எல். எம். ஜி — 01
- ★ அதற்குரிய ரவை லிங்குடன் — 01
- ★ ரம்' மகஸீன்கள் — 04
- ★ ரி-56 துப்பாக்கி — 04
- ★ அவற்றுக்குரிய மகஸீன் — 11
- ★ ரி-81 துப்பாக்கி — 01
- ★ அதற்குரிய மகஸின் — 04
- ★ நடுத்தர ரவைகள் — 750
- ★ ஏ. கே. மகஸீன் தாங்கிகள் — 04
- ★ ஜே. ஆர். கிரனேட்டுகள் — 07
- ★ சப்பாத்து — 4 சோடி
- ★ தண்ணீர் தாங்கி — 01
- ★ மழைக் கவசம் — 01

[உ-5]

# இலங்கையின் எதிர்காலம் பிரேமா, பிரபா கைகளில்!

## பி. பி. ஸி. செய்தியாளரின் கருத்து

லண்டன், ஜூன் 2

இலங்கையின் விதி ஜனாதிபதி பிரேமதாசா, விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் ஆகிய இருவரின் கைகளிலேயே தங்கி உள்ளது.

—இவ்வாறு எழுதியுள்ளார் கொழும்பில் கடந்த இரண்டு வருடங்களாக பி. பி. ஸி. செய்தியாளராகப் பணிபுரிந்து விட்டு ஆப்கானிஸ்தானுக்கு மாற்றலாகிச் சென்றுள்ள கிறிஸ்தோபர் மொறிஸ்.

''இலங்கைக்குப் பிரியாவிடை'' என்ற தலைப்பில் அவர் எழுதிய நீண்ட கட்டுரையில் முக்கிய பகுதிகள் சில வருமாறு:-

இலங்கை அரசியல் என்ற நாணயத்தின் ஒரு பக்கம் சிங்களச் சிங்கம், மறுபக்கம் தமிழ்ப் புலி.

ஜனாதிபதி பிரேமதாசாவும், தலைவர் பிரபாகரனும் தேசியம் என்ற மொழியையும் சின்னத்தையும் பயன்படுத்தி வருகிறார்கள்.

ஜனாதிபதி பிரேமதாசா, தலைவனைப் போலவே சொந்த முயற்சியால் உயர்ந்துவிட்ட பிரபாகரனை இரகசியமாக வியந்து பாராட்டுகிறார் என நம்பப்படுகிறது. எதிரி என்றாலும் மனதிற்குள் ஒரு பாராட்டு.

(6ஆம் பக்கம் பார்க்க)

# அலம்பிலில் கடும் சண்டை!

யாழ்ப்பாணம், ஜூன் 2

முல்லைத்தீவு மாவட்டம் அலம்பில் பகுதியில் நேற்று விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்றது.

கடந்த வியாழனன்று முல்லைத்தீவிலிருந்து மணலாறு நோக்கி நகர முற்பட்ட பெரும் படையணியுடனேயே விடுதலைப் புலிகள் மோதி வருகின்றனர்.

நேற்றுக்காலை 5 ஆம் கட்டை பகுதியிலிருந்து நகர முற்பட்ட படையினர் மீது புலிகள் கடும் தாக்குதலைத் தொடுத்தனர்.

இரு பொம்மர்கள், இரண்டு ஹெலிகள், ஓர் அவ்ரோ ஆகியவை வானத்தாக்குதல்கள் நடத்த—

கடலில் தரித்து நின்ற ஒரு பெரிய பீரங்கிக் கப்பலும் ஆறு விசைப்படகுகளும் கடலிலிருந்து பீரங்கித் தாக்குதலை நடத்த—

அவற்றின் உதவியுடன் படையினர் முன்னேற முயன்

[6ஆம் பக்கம் பார்க்க]

## மட்டக்களப்பில் கண்ணிவெடி! 3 படையினர் பலி!!

மட்டக்களப்பில் நேற்று விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலில் ஜீப் ஒன்று சிக்கியதில் 3 படையினர் உயிரிழந்தனர்

ஆஸ்திரேலிய வானொலி வெளியிட்ட செய்தியின்படி உயிரிழந்த மூவரும் பொலீஸ்காரர்களாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

[உ-10]

## ஹெலித்தாக்கு!

யாழ்ப்பாணம், ஜூன் 2

சிறுப்பிட்டி, புத்தூர் பகுதிகளில் தோட்டவேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மக்களை நோக்கி நேற்றுக்காலை 9 மணியளவில் ஹெலிக்கொப்டர் ஒன்று தாக்குதல் நடத்தியது.

வேலை செய்து கொண்டிருந்தவர்கள் தோட்டங்களை விட்டு ஓடி, காயமின்றித் தப்பித்துக் கொண்டார்,

(உ-15)

## குமணவில் தபால் பொதிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 2

உணவுப்பொருள்கள் மற்றும் தபால் பொதிகள் என்பவற்றுடன் 'குமண' கப்பல் நேற்று கொழும்பில் இருந்து புறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. நாளை அது பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[உ-5]

## கிராம சேவையாளர் தெரிவுப் பரீட்சை 13 ஆம் திகதி

கிராம சேவையாளர்களை தெரிவு செய்வதற்கான பரீட்சை இம் மாதம் 13 ஆம் திகதி நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 50 ஆயிரம் பரீட்சார்த்திகளுக்கு உரிய அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று பரீட்சை ஆணையாளர் அறிவித்திருக்கிறார்.

(உ-எ)

## காவல்துறை அணி வகுப்பு வண்ணப் படம்

கொழும்பு, ஜூன் 2

தமிழீழ காவல்துறையினரின் அணி வகுப்பை தலைவர் திரு. வே. பிரபாகரன் பார்வையிடும் வண்ணப்படம் கடந்த ஞாயிறு 'த ஐலண்ட்' வார இதழில் முன்பக்கத்தில்

[2ஆம் பக்கம் பார்க்க]

# இரண்டு மாதங்களில் யுத்தத்துக்கு முடிவாம்

## பிரதமர் கூறியதாகச் செய்தி

வடக்கு-கிழக்கு யுத்தத்தை இன்னும் இரண்டு மாதங்களில் அரசாங்கம் முடிவுக்குக் கொண்டு வந்து விடும்.

பிரதமர் டி. பி. விஜேதுங்கா கண்டியில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அடுத்து வரும் இரண்டு மாதங்களில் வடக்கு - கிழக்கில் நிலவும் வன்முறையை நிறுத்த அரசு சங்கற்பம் பூண்டுள்ளது —

இரண்டு மாத காலத்தினுள் அரசாங்கம் எவ்வாறு வன்முறையை முடிவுக்குக் கொண்டு வரும் என்பது பற்றிய தகவல் எதையும் வெளியிடமாட்டாது. இரகசியமாகவே வைத்திருக்கும் — என்றும் திரு. விஜேயதுங்கா கூறியதாக ''த ஐலண்ட்'' பத்தி

[6ஆம் பக்கம் பார்க்க]

## இடம் பெயர்வு

முல்லைத்தீவுப் பகுதியில் இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகளை அடுத்து குமுழமுனை, அலம்பில், செம்மலைப் பகுதியைச் சேர்ந்த மக்கள் நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், தண்ணீரூற்று, குட்டாமலை ஆகிய பகுதிகளுக்கு இடம் பெயர்ந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

[உ-15]

# வலி-வடக்கில் நேற்று மயான அமைதி நிலை!

## மக்கள் திரும்புகின்றனர்

தெல்லிப்பழை ஜூன் 2

கடந்த நான்கு நாட்களின் பின்னர் வலி வடக்குப் பகுதியில் நேற்று மயான அமைதி நிலவியது.

கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்த இராணுவ நடவடிக்கைகளால் பதற்றமடைந்திருந்த இப்பிரதேசம் நேற்று ஓரளவு வழமைக்கு திரும்பியது.

மக்கள் நடமாட்டம் காணப்பட்டது. கடைகள் ஓரளவு திறந்திருந்தன. துர்க்காபுரம், மல்லாகம் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பிச் சென்ற வண்ணம் இருந்தனர்.

நேற்று மாலை 4 மணி வரை அந்தப் பகுதியில் பெரும் தாக்குதல் எதுவும் நடைபெறவில்லை.

[அ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணவில்லை

சிவலிங்கத்தின் மகன் குகதீஸன் (வயது 15] என்பவரைக் காணவில்லை. நாயன்மார்கட்டிற்கும் முத்திரைச் சந்திக்கும் இடையில் லேடீஸ் சைக்கிளில் தகப்பனாருக்கு முன் போய்கொண்டிருக்கும் போது காணமல் போய்விட்டார். இவரது உயரம் 5½ அடி, பொது நிறம் கடைசியாக காணும் போது நீல நிற அரைக்கால் சட்டையும், மெலிதான நீல நிறசேட்டும் அணிந்திருந்தார். இவர் சித்த சுவாதீனமற்றவர் இவரைக் காண்பவர்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கு அறியத்தரவும்.

தகவல்:

பலாலி றோட், கோண்டாவில்,

இரத்தினம் சிவலிங்கம்

[21219]



## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்
## வருடாந்தப் பொதுக்கூட்டம்

இடம் : யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி
காலம் : 7 — 6 — 1992 ஞாயிறு காலை 9-00 மணி

நிகழ்ச்சி நிரல் :

1. மௌன அஞ்சலி
2. தலைவர் உரை
3. வருடாந்தப் பொதுக்கூட்ட அறிக்கை
4. சிறப்புரை
   I) திரு. செ. பத்மநாதன் [திட்டப் பணிப்பாளர்]
   II) திரு. த. மகாதேவன் [உணவு மருந்துப் பரிசோதகர்]
   III) விடுதலைப் புலிகள் முக்கிய பிரமுகர்கள்
5. சங்கத்தின் உப விதிகளை ஆராய்தல், அங்கீகரித்தல், செயற்குழு தீர்மானங்களை பரிசீலித்தல்.
6. நிர்வாகிகள் தெரிவு

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகந்தருமாறு வேண்டுகின்றோம்.

செயலாளர்
யாழ். மா. பே. உ. சங்கம்

3, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

[21218]



## 51ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 15 — 05 — 1954



உதிர்வு: 13 — 04 — 1992

ஜேர்மனியில் காலமான
அமரர்
### தம்பிமுத்து கணேசகுமார்

புத்தாண்டு நமக்கு இங்கே
புஷ்பம் போல் பூக்கவில்லை!
திடீரென வந்த கால தேவன்
பூப்போன்ற எம் செல்வத்தை
கவர்ந்து விட்டான் புண்ணியவானாக
மனைவி மக்களைப் பரிதவிக்கவிட்டு
பயணித்து சென்று விட்டாய்!
காலமெல்லாம் கண் கலங்காமல்
காத்திடுவாய் என்று கனவு கண்டோம்
எம் நினைவெல்லாம் கனவாகி
போனதையா எம் நெஞ்சம்
தாங்க முடியாமல் தவிக்குதையா!

நிழல் தந்த மரத்தைக் காணாமல் தவிக்கும்;

மனைவி, பிள்ளைகள் (ஜேர்மனி),
பெற்றோர், மாமா, மாமி,
சகோதர சகோதரிமார், மச்சான்மார்
மச்சாள்மார், மருமக்கள், பெறாமக்கள்.

உரும்பராய் கிழக்கு, கரந்தன்.

[21172]


## இன்று

பேராசிரியர் சோ. செல்வநாயகம் நினைவுப் பேருரை நிகழ்ச்சி இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

யாழ். பல்கலைக் கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி — ''யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக் கொள்ளல் அதன் 'உருவாக்கம்' 'அசைவியக்கம்' '' — என்ற தலைப்பில் நினைவுப்பேருரை நிகழ்த்துவார்.

யாழ். பல்கலைக் கழக புவியியற்றுறைத் தலைவர் திரு. எஸ். பாலச்சந்திரன் தலைமையில் நடக்கும் இந்நிகழ்ச்சியில் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா ஆரம்ப உரையையும், கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை அறிமுக உரையும் நிகழ்த்துவர். [உ]

### காவல்துறை...

[1 ஆம் பக்கத்தொடர்ச்சி]

பிரசுரமாகியுள்ளது.

காவல்துறை ஆரம்பிக்கப்பட்டு முதலாவது அணியினர் தமது பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறியபோது அவர்களின் அணிவகுப்பை, காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் சகிதம் தலைவர் திரு. வே. பிரபாகரன் பார்வையிடும்போது எடுக்கப்பட்ட படமே ''த ஐலண்ட்' பத்திரிகையில் பிரசுரமாகியுள்ளது. [உ-3]

### மன்னாரில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பத்துப் பேர் கொண்ட இராணுவ அணியின் மீது கிளைமோர் தாக்குதலுடன் கூடிய இந்த அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டது. சுமார் பத்து நிமிட நேரம் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலையடுத்து தாக்குதலில் சிக்கிய படையினருக்கு உதவுவதற்காக மாந்தை முகாமிலிருந்து மற்றொரு இராணுவ அணி முன்னேறி வந்தது. அந்த அணியினர் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர். சுமார் ஐந்து நிமிட நேரம் நீடித்த இத்தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் அந்தப் படை அணி பின்வாங்கிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.


## தேவை

English Typing படிப்பிப்பதற்கு அனுபவம் உள்ள ஆசிரியை தேவை. நற்சான்றிதழ்களுடன் 8-00 மணி — 4 00 மணி வரை நேரில் வரவும்.

**Bond Institutes,**
58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[4717]



# O/L-92
## DAY CLASS
## பிரிவு - 3

மாதாந்த பயிற்சிப் பரீட்சைகளுடன்

ஆரம்பம்: 02-06-92

**BOND INSTITUTES**
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[4716]


### நாடாளுமன்ற விவகாரம்
## ஐ. தே. க.- எதிரணி 'லடாய்'; சமரச முயற்சி தோல்வியில்!

நாடாளுமன்ற விவகாரங்களை சுமுகமாக நடத்துவதில் ஆளும் ஐ தே. கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாட்டைக் களைய எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்து விட்டதாகக்கூறப்படுகின்றது.

இந்த முயற்சி தொடர்பான சமரசப் பேச்சுக்களில் சிரேஷ்ட அமைச்சர்கள், தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், மற்றும் சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் என்றும் —

அப்பேச்சுக்கள் வெற்றி அளிக்காமல் முடிந்தன என்றும் 'சண்டே ஐலண்ட்' தகவல் வெளியிட்டுள்ளது.

இதே வேளை —

நாடாளுமன்ற நடவடிக்கைகளை நடத்துவதற்குத்தேவையான ஒத்துழைப்பை வழங்க எதிர்க்கட்சிகள் முன்வராவிட்டாலும், தமக்கு நாடாளுமன்றத்தில் இருக்கும் பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்ற விவகாரங்களை நடத்தி முடிக்கப் போவதாக ஆளும் கட்சி தீர்மானித்துள்ளது என்று ''சண்டே ஒப்சேர்வர்'' செய்தி வெளியிட்டிருக்கின்றது.

நாடாளுமன்றம் இம்மாதம் 9 ஆம் திகதி மீண்டும் கூடவிருக்கிறது. [உ-எ]

## அரசைப் பதவி இறக்க 9மாத கால எதிர்ப்பு இயக்கம்
## சு. கவின் திட்டம் தயார்!

கொழும்பு, ஜூன் 2

மக்கள் சக்தியைப் பயன்படுத்தி, ஜனநாயக வழிகளில் அரசாங்கத்தை பதவியில் இருந்து வெளியேற்ற ஒன்பது மாத கால பெரும் எதிர்ப்பு இயக்கம் ஒன்றை சுதந்திரக் கட்சி எம். பி. மஹிந்த ராஜபக்ஷ தயாரித்திருக்கிறார்.

இது சம்பந்தமான திட்டம், திரு. அனுரா பண்டாரநாயக்காவின் தலைமையில் தயாரிக்கப்பட்டதாக 'சண்டே ரைம்ஸ்' தகவல் வெளியிட்டு இருக்கிறது.

இதன் முதல் கட்டமாக 60 மைல் நீள மனித சங்கிலிப் போராட்டம் ஜூலை 12ஆம் திகதி கொழும்பில் இருந்து இரத்தினபுரி சமன் தேவாலயம் வரை நடத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. இத்திட்டத்தை ஒழுங்கு செய்யும் பொறுப்பு கொழும்பு மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பி ஜினதாஸா நியதபாலாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இம் மாதம் 17ஆம் திகதி இரைச்சல் எழுப்பும் போராட்டத்தை நடத்துவதும் அத்திட்டத்தில் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

இவற்றை விட கிராம யாத்திரை ஒன்றை மேற்கொள்ளும் யோசனை ஒன்றும் முன்வைக்கப்பட்டு உள்ளது. இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்றை இம் மாதம் 7ஆம் திகதி அனுரா பண்டாரநாயக்கா அழைத்துள்ளார். சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பிரதேச சபை, மாநகர, மற்றும் நகர சபை உறுப்பினர்கள் அக்கூட்டத்தில் பங்கு கொள்ள அழைக்கப்பட்டுள்ளனர். [உ-எ]

### நடவடிக்கை எடுக்கப்பட்டால்
## சாகும்வரை உண்ணாவிரதம்; இரு எம். பிக்கள் மிரட்டல்

கொழும்பு, ஜூன் 2

அண்மையில் நாடாளுமன்றத்தில் முறைகேடாக நடந்து கொண்டதாகக் கூறப்படும் விவகாரம் குறித்து, தங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டால் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக சுதந்திரககட்சி எம். பிக்களான ரிச்சர்ட் பதிரானாவும் மஹிந்த ராஜபக்ஷாவும் அறிவித்துள்ளனர்.

நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்திவைத்துவிட்டு சபாநாயகர் தனது இருக்கையில் இருந்து வெளியேறிக் கொண்டிருந்த சமயம் சுதந்திரக்கட்சி எம். பிக்கள் சிலர், சபாநாயகர் மீது புத்தகங்களை வீசியதும் அவரை 'தம்பி' என்று அழைத்ததும் தெரிந்ததே.

இது தொடர்பாக ஆறு சுதந்திரக்கட்சி எம். பிக்களின் நடத்தை குறித்து விசாரணை நடத்தி நடவடிக்கை எடுப்பதற்கு நாடாளுமன்ற உரிமைகள் குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அந்த ஆறு எம். பிக்கள் பட்டியலில் மஹிந்த ராஜபக்ஷாவினதும் ரிச்சர்ட் பதிரானாவினதும் பெயர்களும் உள்ளன.

இதேவேளை —

சபாநாயகர் எம். எச். முஹமதுவை 'தம்பி' என்று கூறி கிண்டல் செய்த செயலுக்காக அவரிடம் மன்னிப்புக் கோருவது என்று சுதந்திரக் கட்சி மத்திய செயற்குழு முடிவு செய்துள்ளது.

மன்னிப்புக் கோரும் கடிதத்தை கட்சியின் கொரடா திரு. ரிச்சர்ட் பதிரான, சபாநாயகரிடம் கையளிப்பார் என்று 'சண்டே ஒப்சேர்வர்' செய்தி வெளியிட்டிருக்கிறது.

இதனிடையில் —

நாடாளுமன்ற உரிமைகள் குழுவின் கூட்டத்தில் கலந்து கொள்வது இல்லை என்று சம்பந்தப்பட்ட ஆறு எம். பிக்களும் முடிவு செய்துள்ளனர் என்று 'சண்டே ரைம்ஸ்' செய்தி தெரிவிக்கின்றது. (உ-எ)

## சுதந்திரக்கட்சி போட்டியிடும்

கொழும்பு ஜூன் 2

அடுத்த மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடுவது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முடிவு செய்துள்ளது.

மாகாணசபைத் தேர்தல்கள் இவ்வருட இறுதியில் நடைபெறவுள்ளன.

தேர்தல் உத்திகளைத் தயாரிக்கவும், தகுந்த வேட்பாளர்களைத் தெரிவு செய்யவும் கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, திரு. அனுரா பண்டாரநயேக்கா, கட்சிச்செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றை கட்சி மத்திய செயற்குழு கடந்த வியாழக்கிழமை நியமித்தது. (த-எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### விடுதலைப் புலிகளுக்குத் தடை விதிப்பதா?

# எமது நலனின் அடிப்படையில் நாமே முடிவு செய்வோம்!

## அமைச்சர் தொண்டமான் பேட்டி

கொழும்பு, ஜூன் 2

'தனது தேசநலன் கருதி இந்தியா விடுதலைப் புலிகளுக்குத் தடை விதித்தது. எம்மைப் பொறுத்த வரை நாம் எமது சொந்த நாட்டின் நலன் கருதி முடிவுகளை எடுக்க வேண்டும்.'

— அமைச்சர் தொண்டமான் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இந்தியாவின் தடை விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையேயான பேச்சுகளை ஏன் பாதிக்க வேண்டும்? இதற்கான காரணம் எதனையும் நான் காணவில்லை.

எமது சொந்த நலன்கருதி நாம் ஏதாவது செய்வது குறித்து எவரும் எம்மீது கோபம் கொள்ள முடியாது.

விடுதலைப் புலிகளுக்கும் ஏனைய அமைப்புகளுக்கும் பயிற்சி அளிப்பதாக இந்தியா மீது இலங்கை முன்னர் குற்றஞ்சாட்டி வந்தது. அப்போது இந்தியா எம்மைப் பற்றி இஞ்சித்தும் கவனிக்கவில்லை. அது போன்று நம்மையும் நமது நாட்டின் நலனின் அடிப்படையில் வழி நடத்த வேண்டும்.

கேள்வி; விடுதலைப் புலிகளுடன் அரசு தொடர்ந்து பேச வேண்டும் என்று நீங்கள் எண்ணுகின்றீர்களா?

தொண்டா; இனப்பிரச்சினைக்கு நாம் தீர்வு காண வேண்டும். எப்படி அதனைக் காணமுடியும் என்பது விவரமான ஒரு விஷயமாகும். யுத்தம் ஒன்றுக்காக இவ்வளவு அதிக பணத்தைச் செலவு செய்வது பெரிய டாம்பீகமாகும். பல ஆண்டுகளாகச் சண்டையிட்டு வருகின்றோம்; பலன் வாழ்க்கைச் செலவு உயர்ந்ததுதான். பிரச்சினைக்கான இறுதித் தீர்வை சமாதான வழிகளில் தான் காண வேண்டும்.

இன்று இருக்கும் நிலைவரத்தை வைத்துப் பார்த்தால், விடுதலைப் புலிகள் இயக்கத்தை நாம் புறக்கணித்துவிட முடியாது. அது பலமான சக்தியாக இருக்கும் வரை அதனைக் கருத்தில் கொள்ளாமல் இருக்க முடியாது. பத்து ஆண்டு கால கெரில்லாப்போர், மக்களை இப்படி நசுக்க முடியாது என்பதைக் காட்டவில்லையா?

கேள்வி: விடுதலைப் புலிகள் இயக்கத்தை நசுக்கி, பிரபாகரனைப் பிடிக்க இந்தியாவும் இலங்கையும் கூட்டு முயற்சியில் ஈடுபடுவதற்கான சாத்தியம் பற்றி உங்கள் கருத்து என்ன? மேலும் பிரபாகரனை நாடு கடத்த வேண்டும் என்ற இந்தியாவின் கோரிக்கைக்கு இலங்கை பதிலளிப்பது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

தொண்டா: இதனை ஏன் இவர்கள் இவ்வளவு காலமும் செய்யவில்லை? இந்திய அமைதிப்படை இங்கிருந்தது. இந்தியாவும் இலங்கையும் சேர்ந்து செயற்பட சந்தர்ப்பமும் இருந்தது. அப்படிச் செய்வது செயல் பூர்வமானதொன்றல்ல என்ற காரணத்தினால் அப்படிச் செய்யாமல் விட்டார்கள்.

நாடு கடத்தல் என்பது நடைமுறைச் சாத்தியமானதா என்பதை ஒருவர் பார்க்க வேண்டும். பிரபாகரனை ஒரு பக்கம் விடுங்கள்— எமது அனுபவத்தின் படி, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சாதாரண தலைவர்களையே உயிருடன் பிடிக்க முடியாது— என்றார்.

(உ-எ)

# காலாட் படையணி பெரிதும் பாதிப்பு!

கொழும்பு, ஜூன் 2

கடந்த ஆண்டு விடுதலைப் புலிகளுடன் நடத்தப்பட்ட தீவிரச் சண்டைகளின் போது, இராணுவத்தின் மிகச் சிறந்த காலாட்படையணிகள் சிலவற்றின் பலம் ஏறத்தாழ அரைவாசியாகக் குறைந்து விட்டது.

சுமார் 600 காலாட் படையினர் விடுதலைப் புலிகளின் மிதிவெடிகளில் சிக்கி கால்களை இழந்தனர்.

— இவ்வாறு ரொஹான் குணசேகரா 'சண்டே ஐலண்ட்' பத்திரிகையில் எழுதிய விமர்சனக் கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

'சுழல் காற்று' இராணுவ நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு முன்னர் முப்படைகளின் தளபதிகளும், போர்க்கள இராணுவ அதிகாரிகளுடன், நடவடிக்கை மேற்கொள்ளப்படும் பகுதிகளுக்கு விஜயம் செய்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய பகுதிகளில் சமகால இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது விடுதலைப் புலிகளின் நடமாட்டம் எப்படிக் கட்டுப்படுத்தப்படுகின்றது என்பது இந்த இராணுவ நடவடிக்கையின் போது பரீட்சித்துப் பார்க்கப்பட்டது என்றும் அக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[உ-எ]

### துர்க்கை அம்மன் ஆலய தாக்குதல்:

# இந்து சமயப் பேரவை கவலை தெரிவித்து அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 2

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் குறித்து இந்து சமயப் பேரவை அதிர்ச்சியும் கவலையும் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக இந்து சமயப் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வலி-வடக்குப் பிரதேசத்திலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பரவலாக நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களிலும் ஷெல் தாக்குதல்களிலும் பலர் உயிரிழந்தும் காயமடைந்தும் உள்ளனர். பெருந்தொகையானவர்கள் இடம் பெயர்ந்தும் உள்ளனர்.

அநாவசியமான இந்த உயிர் இழப்புகளையும் சேதங்களையும் தவிர்க்க உடனடியாக அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். வழிபாட்டுத்தலங்கள் மீது எக்காரணம் கொண்டும் தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த)

# பாடசாலைத் தளபாடங்கள் கப்பலில் எடுத்துவரப்படும்?

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ். மாவட்டத்தில், இடம்பெயர்ந்த பாடசாலை மாணவர்கள் கல்வி பயில்வதற்குத் தேவையான தளபாடங்களை, கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்து வர முடிவுசெய்யப்பட்டிருக்கிறது.

கடந்த வாரம் கொழும்பில் நடந்த தேசிய புனர்வாழ்வுக் குழு கூட்டத்தில் இடம் பெயர்ந்த மாணவர்களின் கல்வி பற்றி ஆராயப்பட்டது. அங்கு மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு தனியாக பாடசாலைகள் நிறுவ நிதி வழங்கவும் இணக்கம் காணப்பட்டது.

## இருவர் கைது

கொழும்பு, ஜூன் 2

கற்பிட்டியில் இருந்து மன்னாருக்கு ஹெரோயின் போதைப் பொருளை கடத்த முயன்ற இருவர் கூட்டுப் படையினரால் கைது செய்யப்பட்டு, மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர் என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

[த-5]

### தெரிவுக்குழு விவகாரம்:

# தமிழ், முஸ்லிம் கட்சிகளுடன் சு. க. மீண்டும் பேசும்

கொழும்பு, ஜூன் 2

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவைத் தொடர்ந்து பகிஷ்கரிக்கும் விஷயம் குறித்து தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகளுடன் இன்னுமொரு சுற்றுப் பேச்சுக்களை நடத்துவது என்று சுதந்திரக் கட்சியின் மத்திய செயற் குழு முடிவு செய்துள்ளது.

தெரிவுக் குழுவின் அமர்வுகளில் சுதந்திரக் கட்சி பங்குபற்ற வேண்டும் என்று அனுரா பண்டாரநாயக்கா செயற்குழு கூட்டத்தில் தெரிவித்தார். அனுராவின் யோசனையை திரு. கே. பி. ரத்னாயக்கா, திரு. லஷ்மண் ஜயக்கொடி, திரு. மஹிந்த ராஜபக்ஸ ஆகியோர் ஆதரித்தனர்.

தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகள் அனைத்தும் அரசுக்கு ஆதரவாகச் செயல்படுகின்றன. எனவே எதிர்க்கட்சியினரின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளுமாறு அரசாங்கத்தை அக் கட்சிகள் கோர வேண்டும் என்று ஆனந்த தஸநாயக்கா, சி. வி. குணரத்னா ஆகிய எம். பிக்கள் தெரிவித்தார்கள்.

இறுதியில் தெரிவுக் குழு, பகிஷ்கரிப்பு குறித்து தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளுடன் இன்னொரு சுற்றுப் பேச்சு நடத்துவது என்றும்—

அதில் சு. க எம். பிக்களான ஆனந்த தஸநாயக்கா, சி. வி. குணரத்னா ஆகியோர் பங்குபற்ற வேண்டும் என்றும் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

[உ-எ]

### தெரிவுக்குழு பகிஷ்கரிப்பு விடயம்:

# தமிழ், முஸ்லிம் கட்சிகள் பிரேமாவை சந்தித்து பேசும்

கொழும்பு, ஜூன் 2

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை சுதந்திரக்கட்சி பகிஷ்கரிப்பது குறித்து தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சிக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலையை நீக்கு முகமாக, எதிர்க்கட்சியினரின் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு தமது சந்திப்பின் போது தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதியைக் கோருவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை —

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவைப் பகிஷ்கரிப்பது என்று ஐக்கிய சோஷலிச அணியும் முடிவு செய்துள்ளது.

[உ-எ]

# இலங்கைக் குரங்குகளின் மத்தியிலும் சீதனமுறை!

கொழும்பு, ஜூன் 2

"இலங்கைக் குரங்குகள் மத்தியில் கூட சீதன முறை, சமூக அந்தஸ்து பேதம் போன்றவை நடைமுறையில் உள்ளன."

— இப்படிக் கூறுகிறார் அமெரிக்க பேராசிரியரான வொல்வ்காங் டைற்றஸ்.

கடந்த 20 வருடங்களாக பொலன்னறுவைக் காடுகளில் ஆய்வு நடத்திய அவர் கொழும்பில் ஒரு கருத்தரங்கில் இத் தகவலைத் தெரிவித்தார்.

"டோக் மகேச்" என்ற இனத்தைச் சேர்ந்த 700 குரங்குகளை அவர் ஆய்வு செய்தார்.

மனிதர்களைப் போன்று அந்தஸ்து பேதம், சீதன முறை, விவாகம் ஆகியன குரங்குகளிடம் உண்டு என்று அவர் கூறுகிறார்.

[உ-3]

### முற்றாகத் திருத்தப்படாத நிலையில்

# இரு சீனப் பீரங்கிப் படகுகளையும் கடற்படை மீண்டும் பொறுப்பேற்பு

கொழும்பு, ஜூன் 2

இயந்திரக் கோளாறு காரணமாக திருகோணமலைத் துறைமுகத்தில் வைத்து சீனப் பொறியியலாளர்களால் பழுதுபார்க்கப்பட்டு வந்த மூன்று சீனப் பீரங்கிப் படகுகளில் இரண்டு பூரணமாகத் திருத்தப்படாத நிலையில் கடற்படையினரால் மீண்டும் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

பொறுப்பேற்கப்பட்ட இரண்டு படகுகளும் சேவைக்கு விடப்படவில்லை என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மூன்றாவது சீனப் பீரங்கிப் படகு தொடர்ந்து திருத்தப்பட்டு வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடற்படை பொறுப்பேற்றுள்ள இரண்டு பீரங்கிப் படகுகளும் அதிவேகமாகச் செல்லக் கூடிய வல்லமையின்றியே செயற்படவேண்டியதாக இருக்கும் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இரண்டு பீரங்கிப் படகுகளையும் போர்முனையில் பரீட்சித்துப் பார்த்து, அவற்றின் திறமை மற்றும் அவை போரில் என்ன பங்கு ஆற்ற முடியும் என்பது பற்றி தீர்மானிக்கப்படும் என்றும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒவ்வொரு பீரங்கிப் படகும் 15 கோடி ரூபா செலவில் சீனாவில் இருந்து 1989 இல் வாங்கப்பட்டது. மூன்று படகுகளும் 1991 செப்டம்பரில் இலங்கை வந்து சேர்ந்தன. இந்த ரக பீரங்கிப் படகுகள் ஐந்தே ஐந்துதான் சீனாவினால தயாரிக்கப்பட்டன. எஞ்சிய இரண்டும் சீன அரசிடம் உள்ளன.

இலங்கை வந்து சேர்ந்த பின்னரே இப் பீரங்கிப் படகுகளில் இயந்திரக் கோளாறுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது என்றும்—

அதனையடுத்து இலங்கை அரசு எழுப்பிய ஆட்சேபத்தின் பேரில் இருபது பேரைக் கொண்ட சீனப் பொறியியலாளர் குழு திருத்த வேலைகளுக்காகத் திருமலைக்கு வந்தது என்பதும் தெரிந்தவையே.

[உ-எ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

வேலணையைச் சேர்ந்த செல்லத்துரை பராசக்தியின் 347980188V இலக்க அடையாள அட்டை 29-5-92 இல் கந்தர்மடத்திற்கும், அரியாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும் இல. 234, ஸ்ரான்லி வீதி, [ஸ்ரீதர் தியேட்டர் முன்பாக] யாழ்ப்பாணம். [21214]

### மணமகன்மார் தேவை

42 வயது, பட்டதாரி, தாரமிழந்தவர். 40 வயது Engineer ஆகியோருக்கு உடனடியாக அவுஸ்திரேலியா செல்ல விரும்பும் மணமகன்மார் தேவை. 04 06-1992 இற்கு முன்னர் கிடைக்க விண்ணப்பிக்கவும். 846, மே/பா. உதயன். [4710]

### மணமகள் தேவை

M. Sc சாட்டர்ட் என்ஜினியர், வயது 32, நட்சத்திரம்: திருவோணம், செவ்வாய் இல்லை. உகண்டாவில் கடமை புரிபவர். 26 வயதிற்கு உட்பட்ட அழகிய, படித்த பெண் தேவை. G குணரட்னம், விவாகப் பொருத்துனர், 169, பலாலி வீதி யாழ்ப்பாணம். [21216]

### இலவச திருமண சேவை

38 வயது, திருவாதிரை, படித்து சுயமாக கமம் செய்பவர். விவாகத்தின் பின் வெளிநாடு புறப்படவுள்ளார். இவருக்கு தொழில் புரியும் மணப்பெண்ணை பெற்றோர் தேடுகின்றனர். தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, வாழ் நாச்சிமார் கோவிலடி. [4714]

## பத்திரிகையாளர் ஒய்வூதியத்திட்டம்

பத்திரிகையாளர்களுக்கான ஒய்வூதியத் திட்டம் விரைவில் அமுல் செய்யப்படும்.

தகவல்துறை ராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்கா தம்மைச் சந்தித்த பத்திரிகையாளர் சங்கத் தூதுக்குழுவிடம் இவ்வாறு தெரிவித்தார்.

ஓய்வூதியத் திட்டத்துக்கான நகல் தயாரிக்கப்பட்டு விட்டதாகவும் அப்போது அவர் தெரிவித்தார் [த-எ]

## அமிர் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 2

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கொலை வழக்கு மேல்நீதிமன்ற நீதிபதி வீரசூரிய முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டு பின்னர் அடுத்த மாதம் 30 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. [த]

## சுட்டுக்கொலை

டயர் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த ஊழியர் ஒருவர், ராகமையில் உள்ள அவரது வீட்டின் முன்னால் வைத்து இனம்தெரியாத துப்பாக்கி மனிதன் ஒருவனால் கடந்த செவ்வாயன்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

உயிரிழந்தவர் 32 வயதான எஸ். ஏ. குணவர்த்தனா என்று அடையாளம் காணப்பட்டது. [ஒ-எ]

---


# றேடியன்ற் கல்வி நிலையம்

புங்கன்குளம், அரியாலை,

**94** தூய - பிரயோக கணிதம்

★ திரு. A. குணசிங்கம் ★

செவ்வாய், வியாழன் 3-00 மணி

ஆரம்பம்: 02 - 06 - 1992 3 மணி.

[21213]


---

யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கப்

## பொதுக் கூட்டம்

இடம்: — கல்லூரி குமாரசுவாமி மண்டபம்
காலம்: — 28 06-1992 [ஞாயிறு]
நேரம்: — காலை 9 00 மணி

★ சங்க உறுப்பினர்களுக்குத் தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்பப்படமாட்டாது. இவ்வறிவித்தலையே அழைப்பிதழாகத் தயவு செய்து ஏற்றுக் கொள்ளுக.

★ உறுப்பினர்கள் தங்களுடைய உறுப்பினர் அட்டைகளை 15-06-1992 ஆம் திகதிக்கும் 19-06-1992 ஆம் திகதிக்குமிடைப்பட்ட காலப் பகுதிக்குள் சங்கப் பணிமனையில் தவறாது பெற்றுக் கொள்ளுக.

★ பொதுக் கூட்டத்திற்கான பிரேரணைகளை அனுப்ப விரும்பும் உறுப்பினர்கள், தயவு செய்து 17-06-1992 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் கௌரவ செயலாளருக்கு அனுப்பி வைக்குக.

★ மதிய உணவு அன்பளிப்பு ரூபா 25/-. மதிய உணவில் பங்கு கொள்ள விரும்பும் உறுப்பினர்கள், தயவு செய்து இத்தொகையை 23-06-1992 ஆம் திகதிக்கு முன்னர் சங்கப்பொருளாளரிடம் செலுத்தி உதவும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

சுந்தரம் டிவகலாலா,
கௌரவ செயலாளர்.

யாழ். இந்துக் கல்லூரி.
01-06-1992. [சி-2380]

---

## 383 ஆம் நாள் நினைவஞ்சலி



### செல்வி கௌசல்யா கணேசன்

அன்னை மடியில்: 05-07-1969 ஆண்டவன் அடியில்: 15-05-1991

திதி: 02-06-1992

எம் இதயத்தில் என்றும் வாழ்ந்துவரும் எம் தெய்வமே!
நீ என்றும் எம்முடனே வாழ்கின்றாய் என்பதனால்
நீ எமைப் பிரிந்து ஆண்டுகள் ஒன்றாகியும் –
நம்ப முடியவில்லையே!

எம் உயிர் உள்ளவரை என்றும்
நீ எம்முடனே வாழ்வாய்!

பப்பா - அம்மா,
சகோதர, சகோதரிகள்,
உறவினர், நண்பர்கள்.

"செந்தாரகை",
வட அல்வாய். [21150]

---

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### கணபதிப்பிள்ளை நடராஜபிள்ளை

(தேசிய சேமிப்பு வங்கி)

மலர்வு: 10 — 11 — 1934 மறைவு: 02 — 06 — 1987


எம் உள்ளத்தில் என்றும் ஒளிவீசும் தெய்வமாய் நிலைத்து நிற்கும் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

'நந்தஸ்தன்',
இடைக்காடு. [4705]

---

## 11 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### கந்தையா கனகசுந்தரம்

[பொலீஸ் சார்ஜன்ட்]

பிறப்பு: 17-02-1932 இறப்பு: 04-06-1981

திதி: 02 06-1992

1981 ஆம் ஆண்டு நாச்சிமார் கோவிலடியில் நடந்த, அசம்பாவிதத்தில் அகால மரணமடைந்த அன்பு அப்பாவுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்!

இந்நினைவு நாளில் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்.

மீசாலை வடக்கு,
மீசாலை. [4706]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### வினையும் விளைவும்

யுத்தம் அல்லது போர் புரிவது என்பதற்கு வரைவிலக்கணம் என்ன? உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணம் குறித்து ஸ்ரீலங்கா அரசுக்கு அக்கறை இல்லை. அது தனக்கென ஒரு வரைவிலக்கணத்தை வகுத்திருக்கிறது!

ஆயுதம் இல்லாத, நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழ் மக்களை விமானத்தாக்குதல்கள் மூலம் கொல்வது. பொதுமக்களின் குடியிருப்புகள் மீது குண்டுகள், எறிகணைகளை வீசி நாசமாக்குவது ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள், பொதுச் சந்தைகள் போன்ற பொதுமக்கள் கூடும் இடங்களிலும், அகதிகள் தங்கியிருக்கும் முகாம்களிலும் தாக்குதல் நடத்தி இயன்றவரை அதிகளவில் அப்பாவித் தமிழ் மக்களைக் கொல்வது. இவை மட்டுமா?

ஆலயங்கள் மீது குண்டுகள் எறிகணைகளை வீசி அவற்றைச் சேதப்படுத்தி அழிப்பது. அங்கு கூடும் பக்தர்களை, தஞ்சம் அடைந்த அகதிகளைக் கொல்வது — இவை ஸ்ரீலங்கா இராணுவத்தின் யுத்த வரைவிலக்கணத்தில் இப்போது மிகமிகக் கட்டாய பகுதியாகிவிட்டது!

வற்றாப்பளை அம்மன் ஆலயத்தின் மீதும், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் மீதும் நடத்தப்பட்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்கள் அதனையே பிரதிபலிக்கின்றன.

"பத்தினித் தெய்யோ"— அம்மன் தெய்வம்— என்று தாமும் வணங்கும் சக்தியின் மீது படையினருக்கு அப்படி என்ன கோபம்? இந்த சக்தி— அன்னை அம்மன்—தான் தமிழர்கள் விடுதலைப் போரைக் கைவிடாமல் தொடர்வதற்கான வீரத்தை வழங்குகிறாள் என்று நினைத்து ஆத்திரப்படுகிறார்களோ?

வடக்கு - கிழக்கு மக்களின் சுதந்திரப் போராட்டத்துக்கு பக்கத் துணையாக நிற்பது அவர்களது மனஉறுதி மட்டுமல்ல; ஆன்மீக பலம்தான் அந்த உறுதியை வளர்க்கிறது. இந்த உண்மை அரசினருக்குப் புரிந்திருக்கிறதோ?

அதனால் இங்குள்ள ஆலயங்களை நிர்மூலமாக்கி விட நினைத்தார்களோ? ஆலயங்கள் இருப்பதாலேயே வடக்கு-கிழக்குத் தமிழர் பிரதேசம் என்று உரிமை கொண்டாடப்படுகிறது. இவற்றை அழித்து விட்டால் அவ்வாறு உரிமை கோருவதை தடுத்து விடலாம் என்று நினைக்கிறார்களோ?!

இந்து ஆலயங்கள் மீது குண்டு வீசித் தாக்குவது வெறும் எழுந்தமானமான நடவடிக்கை அல்ல. நீண்ட வரலாற்றுச் சதி. தமிழ் மக்களின் வழிபாட்டுச் சுதந்திரத்தைப் பறித்தெடுக்கும் பௌத்த பேரினவாதச் சூழ்ச்சி.

எனவே இது குறித்து அரசாங்கத்துக்கோ ஜனாதிபதிக்கோ மகஜர் அனுப்பிப் பயன் தரப்போவதில்லை; விசாரணைக் குழுக்களாலும் விடிவு கிடைக்கப் போவதில்லை.

ஸ்ரீலங்கா அரசு இனவாத அரசு மட்டுமல்ல. மதவாத அரசுமாகும் என்பதை உலக சபைகளுக்கு எடுத்துக் கூற வேண்டும்.

அன்னை துர்க்கையோடு விளையாட நினைப்போருக்கு அவளும் பாடம் புகட்டுவாள். அரசன் அன்று அறுப்பான்; தெய்வம் நின்றல்லவா அறுப்பான்? கர்ம வினையில் நம்பிக்கையுள்ள பௌத்தர்கள் தாம் தாம் விதைக்கும் வினையின் பயனை அறுவடை செய்யாமல் தப்பிக் கொள்ள இயலாது!

அரசியல் கொலைகள், ஆட் கடத்தல் சம்பவங்களை

# விசாரிக்க மக்கள் நீதிமன்றங்கள்

# கூட்டு எதிரணியின் புதிய யோசனை

கொழும்பு, ஜூன் 2

அரசியல் கொலைகள், கடத்தல்கள், ஆட்கள் காணாமற் போதல் ஆகிய சம்பவங்களை விசாரிக்க மக்கள் நீதிமன்றங்களை அமைக்கும் யோசனை ஒன்று பற்றி கூட்டு எதிர்க்கட்சி நடவடிக்கைக் குழு பரிசீலனை செய்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் அவரது இல்லத்தில் நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சி நடவடிக்கைக் குழுவின் முதலாவது கூட்டத்தில் இந்த யோசனையை மாத்தறை மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பி. மங்கள சமரவீர சமர்ப்பித்தார்.

முன்னாள் பிரதிப் பொலீஸ் மா அதிபர் பிரேமதாஸா உடுகம்பொல தெரிவித்த குற்றச்சாட்டுக்களும் பகிரங்கமாக விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும் அக்கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

மாத்தறை மாவட்டத்தில் இடம்பெற்ற வன்செயல்களே மக்கள் நீதிமன்றத்தில் முதலில் விசாரணை செய்யப்பட வேண்டும் என்று கூறிய திரு. சமரவீர, மக்கள் நீதிமன்றத்திற்குத் தலைமை வகிக்கும் நீதிபதிகளாக சிரேஷ்ட சட்டத்தரணிகள் நியமிக்கப்பட வேண்டும் என்றும் சொன்னார்.

வன்செயல்களில் உயிரிழந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டோரின் பெற்றோர்கள், உறவினர்கள் மக்கள் நீதிமன்றத்திடம் முறையிடலாம் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## களுதாவளையில் குண்டு வெடிப்பு

கடந்த வியாழனன்று இரவு மட்டக்களப்பு களுதாவளைக்கு அருகில் விடுதலைப் புலிகளால் பொருத்தி வைக்கப்பட்டதாகக் கூறப்படும் கைக்குண்டு ஒன்று வெடித்ததில் சுரேஷ் என்ற புளொட் உறுப்பினர் காயமடைந்தார்.

ஸ்ரீலங்காப் படையினரும், புளொட் உறுப்பினர்களும் ரோந்து சென்ற சமயமே இச் சம்பவம் இடம்பெற்றது.

## அண்ணனின் பூதவுடலுக்கு உடுகம்பொல அஞ்சலி!

### சிங்கள வார இதழில் படம்

கொழும்பு, ஜூன் 2

தலைமறைவாகி இருக்கும் பிரதிப் பொலீஸ் மா அதிபர் உடுகம்பொல கடந்த வாரம் காலியில் தமது மூத்த சகோதரரின் இறுதிச் சடங்குக்குச் சென்று அவருக்கு அஞ்சலி செலுத்தும் படம் 'ராவய' சிங்களப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளதாம்

உடுகம்பொல மரண வீட்டிற்குச் சென்ற சமயம் இரகசியப் பொலீஸார் அங்கு கடமையில் ஈடுபட்டிருந்ததாகவும்—

எனினும் அவர்கள் உடுகம்பொலவைக் கைது செய்ய எந்த முயற்சியையும் எடுக்கவில்லையெனவும் 'ராவய' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

உடுகம்பொல மீது இரகசியப் பொலீஸாருக்கு 'அபிமானம்' இருப்பதையே இது காட்டுகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-10)

## முஸ்லிம் ஊர்காவலர்களுடன் இனி பொலீஸாரும் கடமையில்

வாழைச்சேனையில் உள்ள காவலரண்களில் முஸ்லிம் ஊர்காவல் படையினருடன் இனிமேல் பொலீஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றனர்.

முஸ்லிம் ஊர்காவல் படையினரின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துமாறு பொது அமைப்புக்களால் விடுக்கப்பட்ட கோரிக்கையையடுத்தே புதிய மாற்றம் அமுலுக்கு வந்துள்ளது.

வாழைச்சேனை பிரதான வீதியில் உள்ள காவலரண்களில் முஸ்லிம் ஊர்காவல் படையினர் மட்டுமே கடமையாற்றி வந்தனர். இனி சிங்களப் பொலீஸாருடன் முஸ்லிம் ஊர்காவல் படையினர் கடமையாற்றுவர். [த-3]

## வவுனியாவில் 4 பிரதேச செயலகங்கள்

வவுனியா மாவட்டத்தில் இவ் வருட இறுதிக்குள் நான்கு பிரதேச செயலகங்கள் அமைக்கப்படும். அதற்குப் புறம்பாக ஓர் மாவட்டச் செயலகம் கம்பியூட்டர் வசதிகளுடன் அமைக்கப்படும்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா இதனை நேற்று முன்தினம் வவுனியாவில் தெரிவித்தார். [த-5]

## பல்கலை. பட்டப்படிப்பை பெற ஆசிரியர்களுக்கு லீவு!

அரசாங்க, தனியார் பாடசாலைகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றும்போது [வெளிவாரியாகப் படித்து] கலைமுதல் தேர்வு [ஜி. ஏ கியூ.], விஞ்ஞான முதல் தேர்வு [ஜி. எஸ். கியூ] பரீட்சைகளில் சித்திபெற்றவர்கள் 1991/92 ஆம் கல்வியாண்டில் பட்டப்படிப்பை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படும்.

ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்ட கலை பட்டக் கற்கை நெறி, விஞ்ஞான பட்டக் கற்கை நெறி ஆகியவற்றை பல்கலைக்கழகத்தில் பயில அனுமதி வழங்கப்படும்

5 வருட ஆசிரியர் சேவையை பூர்த்தி செய்தவர்களும், ஆசிரிய கலாசாலையொன்றில் பதிவு செய்தவர்களும் இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி பட்டப் படிப்பைப் பயில விண்ணப்பிக்கலாம் என்று கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

பட்டப்படிப்புக்குத் தெரிவு செய்யப்படும் ஆசிரியர்களுக்கு சம்பளத்துடன் கூடிய கல்வி விடுமுறை வழங்கப்படும் தனியார் பாடசாலை ஆசிரியர்கள், கல்வி 'விடுமுறை வழங்க முடியும்' என்று பாடசாலை அதிபர் மற்றும் முகாமையாளரிடமிருந்து உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் விண்ணப்பிக்க வேண்டும். [உ-3]

## போலியோ சுவரொட்டி போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ். றோட்டரிக் கழகம் உதயன் நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்திய போலியோ (இளம்பிள்ளை வாத) தடுப்பு சுவரொட்டி சுலோகப் போட்டிகளின் முடிவுகள் நடுவர் குழுவால் அறிவிக்கப்பட்டுள்ளன.

இரு போட்டிகளுக்கும் பெருந்தொகையான விண்ணப்பங்கள் வந்து குவிந்தன. சுயேச்சையான நடுவர் குழு இவற்றைப் பரிசீலனை செய்து, பரிசு பெறும் ஆக்கங்களை தேர்ந்தெடுத்தது.

நடுவர் தீர்ப்பின்படி பரிசு பெறுவோர் விவரம் வருமாறு:-

### சுவரொட்டிப் போட்டி

**முதலாவது பரிசு ரூ. 1000.00**

கிறிஸ்டீன் ஜோதினி யேசுராஜன் [யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலை]

**இரண்டாவது பரிசு ரூ. 750 00**

ஜெம்மா தேவகி மரியதாஸன் [யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலை]

**மூன்றாவது பரிசு ரூ. 500 00**

பொ. விஜயகுமார், [துர்க்காபுரம், மல்லாகம்]

ஒவ்வொன்றும் ரூ 100 00 பெறுமதியான ஆறுதல் பரிசுகள் பெறுவோர்:-

கு. குஷ்ஷந்தினி, இ. கௌரிபாலன், து. துஷ்யந்தன், சோ. ரவீந்திரன், ந. கோவர்த்தனன் [கொக்குவில் இந்துக் கல்லூரி]

மித்ரா துரைராஜா, ஜானகி கந்தசாமி [சுண்டிக்குளி மகளிர் கல்லூரி]

மேரி நொயலின் இம்மானுவேல் [யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்]

மற்றும் கொக்குவில் மேற்கு சந்திரலிங்கம், சந்திரசேகரம் ஆகியோர்.

### சுலோகப் போட்டி

**முதலாவது பரிசு ரூ. 1000 00**

இளமதி கந்தசாமி [கட்டப்பராய், கல்வியங்காடு].

**இரண்டாவது பரிசு ரூ. 750 00**

சிவானந்தன் நந்தகுமார் (உரும்பராய்].

**மூன்றாவது பரிசு ரூ 500-00**

பா. சிவடார்ஷிணி [உடுவில் மகளிர் கல்லூரி].

ஒவ்வொன்றும் ரூ 100-00 பெறுமதியான ஆறுதல் பரிசு பெறுவோர்:-

செல்வி. யா. வானதி [கொக்குவில்], மாணிக்கவாசகர் ஜெயசீலன் [மூளாய் றோட், சுழிபுரம்], அனுஷா சிங்கரத்தினம் [உரும்பராய்], ஸ்ரீ பத்மநாதன் ராஜ்குமார் [யாழ். மத்திய கல்லூரி], சு. வளர்மதி [கோப்பாய் தெற்கு].

கூடுதலான விண்ணப்பங்களை அனுப்பி வைத்த பாடசாலைக்கான சிறப்புப் பரிசை கொக்குவில் இந்துக் கல்லூரி பெற்றுள்ளது.

சுவரொட்டிப் போட்டிக்கான நடுவர் குழுவில் பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி). பேராசிரியர் அ. சண்முகதாஸ், திரு கே. வைத்தீஸ்வரன் [சுகாதாரக் கல்வி அதிகாரி, சுகாதாரத் திணைக்களம்], கலாநிதி ரீ. டபிள்யூ. ஜெயகுலராஜா ஆகியோரும் —

சுலோகப் போட்டிக்கான நடுவர் குழுவில் பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி], பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி சீ. எஸ். நச்சினார்க்கினியன், கலாநிதி என். சிவராஜா ஆகியோரும் — இடம் பெற்றிருந்தனர்.

பரிசு வழங்கும் வைபவம் விரைவில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. [இ]

முடக்கி வைக்கப்பட்ட

## 350 கோடி ரூபா கடன் இலங்கைக்கு கிடைக்கும்

கொழும்பு, ஜூன் 2

முடக்கி வைக்கப்பட்டிருந்த 7 கோடி 50 லட்சம் டொலர் (சுமார் 350கோடிரூபா)கடனுதவியை இலங்கைக்கு மீண்டும் வழங்க சர்வதேச நாணய நிதியம் முன் வந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

ஏற்றுக் கொண்ட பொருளாதார சீர்திருத்த யோசனைகளைச் செயற்படுத்தத் தவறியதற்காக சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு ஒதுக்கப்பட்ட கடனுதவியின் ஒரு பகுதியான 7 கோடி 50லட்சம் டொலரை முடக்கி வைத்திருந்தது.

அந்தப் பொருளாதாரச் சீர்திருத்த யோசனைகளை இலங்கை அரசு தற்போது அமுல் நடத்தியுள்ளது. அதன் காரணமாக கடந்த [illegible] வாரங்களாக பல பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன.

இப்போது முடக்கி வைக்கப்பட்ட அந்த நிதியை இலங்கைக்கு வழங்க சர்வதேச நாணய நிதியம் தீர்மானித்துள்ளதாகப் பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது. (உ-எ)

### சட்டமா அதிபர் ஓய்வு பெறுகிறார்

சட்டமா அதிபர் சுனில் டி சில்வா இன்னும் ஒரு மாத காலத்தில் ஓய்வு பெறவிருக்கிறார்.

51 வயதான அவர் தமது விருப்பத்தை ஜனாதிபதி பிரேமதாஸாவிடம் ஏற்கனவே தெரிவித்துவிட்டதாகக் கூறப்படுகிறது. [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிராயச்சித்த அபிஷேகத்துடன்

# துர்க்கையம்மன் ஆலயத்தில் பூசைகள் நேற்று ஆரம்பம்

பிரசித்தி பெற்ற துர்க்கையம்மன் தேவஸ்தானத்தில் நேற்றுக் காலை 11 மணியளவில் இடம்பெற்ற வாஸ்து சாந்தி, பிராயச்சித்த அபிஷேகம் ஆகியவற்றுடன் பூசைகள் ஆரம்பமாகின.

நேற்று முன்தினம் ஆலயம் மீது மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டு வீச்சினால் சேதமுற்ற ஆலயப் பகுதிகள் தொண்டர்களால் சுத்திகரிக்கப்பட்டன. அதன் பின்னர் பூசைகள் ஆரம்பமாகின.

நேற்று ஏராளமான பக்தர்கள் பூசைகளில் கலந்து கொண்டனர்.

ஆலயத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட வான் தாக்குதலால் பல கோடி ரூபா பெறுமதியான ஆலய உடைமைகள் சேதமாக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

ஆலயத்தின் வசந்த மண்டபம் மீது வீழ்ந்த குண்டால் யாக மண்டபம், களஞ்சியம், ஸ்தம்ப மண்டபம், ஸ்நபன மண்டபம், உள்பிரகார மண்டபங்கள், தேர், சப்பறம் ஆகியனவும் ஆலய வீதியில் அமைந்துள்ள பொங்கல் மண்டபம், திருமுறை மடம், குருக்கள் மடம், கல்யாண மண்டபம் அருகே அமைந்த அகதி முகாம் ஆகியனவும் சேதமடைந்தன. [உ-3]

## சேதங்களை பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், ஜூன் 2

நேற்று முன்தினம் விமானத் தாக்குதலுக்கு இலக்கான தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தைச் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகளும் யாழ். செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளும் நேற்றுப் பார்வையிட்டனர்.

தாக்குதலுக்கு இலக்கான பகுதிகள் மற்றும் சேதங்கள் பற்றிய சரியான தகவல்களை ஆலய நிர்வாகத்திடம் அவர்கள் கோரியுள்ளனர். [உ-5]

## கண்மூடித்தனமான

# குண்டுத் தாக்குதலை நிறுத்த அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 2

குடாநாட்டில் ஆலயங்கள் மற்றும் குடியிருப்புக்கள் மீது படையினரால் மேற்கொள்ளப்படும் கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதல்களை நிறுத்துமாறு கோரும் அவசர செய்தியை யாழ். அரச அதிபர் கே. மாணிக்கவாசகர் ஜனாதிபதிக்கும், இராணுவத் தலைமைப் பீடத்துக்கும் அனுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் மீது பொம்மர்கள் நடத்திய தாக்குதல்களினால் ஆலயம் சேதமடைந்துள்ளமை பற்றியும்—

குடாநாட்டில் பரவலாக மக்கள் குடியிருப்புகள் மீது நடத்தப்பட்ட பீரங்கி மற்றும் ஷெல் தாக்குதல்களினால் பொதுமக்கள் பலர் உயிரிழந்தும், காயமடைந்தும் இருப்பதையும் அரச அதிபர் தனது செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ். அரச அதிபரின் செய்தி செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் அலுவலகம் ஊடாக நேற்று கொழும்புக்கு அனுப்பப்பட்டது.

# தாண்டிக்குளம் பகுதி ஊடாக இனி சைக்கிளில் செல்லலாம்

கொழும்பு, ஜூன் 2

தாண்டிக்குளம் பகுதி ஊடாக பொதுமக்கள் இனிமேல் சைக்கிளில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவுக்கு ஜனாதிபதி பிரேமதாச வருகை தந்ததை அடுத்து இந்தத் தடை நீக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தடை நீக்கம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்படி வவுனியா அரச அதிபருக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தடை நீக்கம் குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்காவுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாக வவுனியா அரச அதிபர் எஸ். தில்லைநடராஜா தெரிவித்துள்ளார். [ஓ-5]

# பாடகர் கப்டன் வீரத்தேவன் பலாலி சமரில் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

கடந்த சனியன்று பலாலி இராணுவ முகாமில் இருந்து கட்டுவன் பகுதியூடாக முன்னேற முயன்ற இராணுவத்தினருடன் நடந்த நேரடி மோதலில் விடுதலைப் புலிகளின் பிரபல பாடகரும் யாழ். மாவட்ட தாக்குதல் படைப் பிரிவு இசைக்குழுவின் பொறுப்பாளருமான கப்டன் வீரத்தேவன் [பியூஸ் மாக் - துரைராசா சிவலிங்கம், அரியாலை] வீரமரணம் அடைந்தார்.

அண்மையில் வெளியான ''களத்தில் நின்று வேங்கைகள்'' பாடல் ஒலிப்பதிவு நாடாவில் இவரது ''போருக்குப் போகும் புலிவீரா!'', ''தாயினும் மேலான காவலன் யாரடா?'', ''அலைகடல் மீதினில் பயணம்'', ''எங்களின் தேசம்'' ஆகிய பாடல்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. முன்னேற முயன்ற இராணுவத்தின் கவச வாகனத்தை தகர்த்தெறிந்து ஆயுதங்களைக் கைப்பற்றும் வேளை இவர் வீரச்சாவு அடைந்தார்.

அன்றைய தினம் மேஜர் சுதன், கப்டன் பவளன், கப்டன் செல்வன், லெப்டினன்ட் புகழேந்தி, லெப்டினன்ட் நித்தி, லெப்டினன்ட் நற்குணம், வீரவேங்கை இறையன்பன், முகிலன் ஆகியோர் வீரமரணம் அடைந்தனர் என்பது தெரிந்ததே. [உ]

# கனடாவில் ஈழத்தமிழர் காயம்

றொறொன்றோ, ஜூன் 2

கனடா, றொறொன்றோவில் நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து வந்த ஈழத் தமிழரான ரமணன் ராமச்சந்திரன் என்பவர் அண்மையில் கொள்ளையர்களால் சுடப்பட்டார்.

இது தொடர்பாக குயபெக் பொலிஸார் ஹோதோர்ண் மைல்ஸ் [வயது 27], டொனால்ட் கோர்னியர் [வயது 38] ஆகிய இரு சந்தேக நபர்களைக் கைது செய்தனர். கொள்ளையிட்டது, துப்பாக்கியால் சுட்டது ஆகிய குற்றச் சாட்டுகள் இந்த இருவர் மீதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

காயமடைந்த ரமணன் ராமச்சந்திரன் றொறொன்றோ மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருந்தார். [உ-எ]

# முடிவுகள் வெளியாகின

கொழும்பு, ஜூன் 2

பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் பரீட்சையின் முடிவுகள் நேற்று வெளியிடப்பட்டன. மாகாணச் செயலாளர்களுக்கு பரீட்சை முடிவுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல தெரிவித்தார். (உ-எ]

# இராணுவத்தினரின் சடலங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 1

வளலாய், கதிரிப்பாய் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மோதல் சம்பவத்தின் பின் இடைக்காடு செம்பிகலட்டி என்ற இடத்தில் நேற்று முன்தினம் இராணுவத்தினரின் மூன்று சடலங்கள் சிதைந்த நிலையில் காணப்பட்டன.

சடலங்களுக்கு அருகில் 500க்கும் மேற்பட்ட ரவைகள் அடங்கிய ரவைக்கோர்வை ஒன்றும் கண்டெடுக்கப்பட்டது.

இதேசமயம் —

இராணுவம் முன்னேறி வந்து திரும்பிய பகுதிகளில் சில வீடுகள் தகர்க்கப்பட்டிருந்தன. (ஓ 15)

## இரண்டு...

[1 ஆம் பக்கத்தொடர்ச்சி]

ரிகை நேற்றுச் செய்தி வெளியிட்டது.

ஆனால் பிரதமர் இவ்வாறு பேசியதாக அரசு சார்பும் பத்திரிகை எதுவும் செய்தி வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. [அ-எ-10]

## இலங்கையின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமதாசாவின் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே உள்ள அரசியல் பிளவு பெரியது. இந்த வெளி கடக்க முடியாத ஒன்று என அவர்களின் ஆதரவாளர்கள் ஒப்புக் கொள்கிறார்கள்.

இரண்டு ஆண்டு காலம் இலங்கையில் இருந்த பின்னர் எல்லாவற்றையும் விட முக்கியமாக மனதில் ஒரு கேள்வி எழுகிறது.

பிரேமதாசாவும் பிரபாகரனும் ஓர் உடன்படிக்கைக்கு வர முடியுமா? வர விரும்புவார்களா? அவ்வாறு உடன்படிக்கைக்கு வர அவர்களைச் சுற்றியுள்ளவர்கள் விடுவார்களா?

அவர்களின் இருவரின் இலட்சியங்களும், கனவுகளும் அவர்களது அரசியல் அபிலாசைகளைப்போலவே பலவகைகளில் மோதவே செய்கின்றன.

ஆயினும் அவர்களின் கைகளில் தான் இலங்கையின் த[illegible] என்று குறிப்பிடுகின்றார். [அ-10]

# புலிகளை தடை செய்த சட்டமுறை தவறானது!

இந்தியாவில் விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் விடயத்தில் உரிய சட்டமுறைகளைக் கையாள இந்தியா தவறிவிட்டது என அவதானிகள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

புலிகளைத் தடை செய்வதற்கு, ''1967 ஆம் ஆண்டின் சட்டவிரோத நடவடிக்கைகள் [தடுப்பு] சட்டத்தை'' மத்திய அரசு எதற்காக தேர்ந்தெடுத்தது என்பது குறித்து அவதானிகள் மத்தியில் வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

இந்த சட்டத்தின் பிரகாரம் — ஓர் இயக்கத்தைச் சட்ட விரோதமானது என்று பிரகடனம் செய்வதற்குபோதிய ஆதாரங்கள் இருக்கின்றனவா என்பதை தீர்மானிக்க மத்திய அரசாங்கம் மேல்நீதிமன்ற நீதிபதியொருவரைக் கொண்ட தனிநபர் விசாரணைக்குழுவை அமைக்க வேண்டும். சம்பந்தப்பட்ட இயக்கம் தனது தரப்பிலான நியாயத்தை முன்வைப்பதற்காக இந்த விசாரணைக் குழுவினால் அழைக்கப்படலாம். அந்த விளக்கத்தையும் ஆராயும் விசாரணைக் குழு, தடைப் பிரகடனத்துக்கு சான்றுகள் இருப்பதாக உறுதி செய்யவேண்டும்.

அவ்வாறு உறுதி செய்த பின்னர் விடுக்கப்படும் தடைப் பிரகடனமானது [பிரகடனப்படுத்தப்பட்ட திகதியில் இருந்து] இருவருடங்களுக்கு அமுலில் இருக்கும். தேவைப்படின் புதிய அறிவித்தல் மூலம் இத்தடை உத்தரவை நீடிக்க முடியும் — என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் விடுதலைப் புலிகளுக்குத் தடை விதிக்கும் விவகாரத்தில் தனிநபர் விசாரணைக்குழு எதுவும் நியமிக்கப்படவுமில்லை; விடுதலைப் புலிகள் தரப்பு வாதங்கள் செவிமடுக்கப்படவுமில்லை என்று சுட்டிக் காட்டப்படுகிறது. [உ-3]

## அலம்பிலில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி!

றனர்.

படையினரின் தாக்குதல்களினால் அலம்பில் முருகன் கோயில், தபாலகம் ஆகியன சேதமடைந்துள்ளன. தூண்டாய் கடற்கரையோரத்தில் தமிழருக்குச் சொந்தமான பல மீன்வாடிகளைப் படையினர் எரித்துள்ளதாகவும் அறியவந்தது.

டொலர் பாம், கென்ட் பாம் மற்றும் மணலாறு முகாம்களில் இருந்து அலம்பில், செம்மலை, குமுழமுனை ஆகிய பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதல் நேற்று நடத்தப்பட்டது.

குமுழமுனையில் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி காயமுற்ற மயில்வாகனம் தியாகராஜா [வயது 45] என்பவர் நேற்று யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டார்.

## மரண தண்டனை

போதைப் பொருள் கடத்தல் குற்றச்சாட்டின் பேரில் இரு இந்தியத் தமிழர் உட்பட எட்டு வெளிநாட்டவர்களுக்கு பங்களாதேஷில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. [உ-5]

# மரண அறிவித்தல்கள்

## சோமநாதர் முருகேசம்பிள்ளை

தங்கோடை காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், 17, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கையில் வசிப்பவருமாகிய சோமநாதர் முருகேசம்பிள்ளை நேற்று [01-06-92] காலமானார்.

அன்னார் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், பாலசுப்பிரமணியம் [பிரதம கணக்காளர், கூட்டுறவு... கூட்டுத்தாபனம்], வேலாயுதபிள்ளை [உதவி நில அளவை அதிபர், பதுளை], Dr. குணரத்தினம் [தலவாக்கொல்லை], பரஞ்சோதி [விரிவுரையாளர், ஆசிரியர் கலாசாலை கோப்பாய்], விஜயரத்தினம் [ஆசிரியர், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி], Dr. ஜெகசோதி [லண்டன்], பாலச்சந்திரன் [பொறியியலாளர், E C.B], Dr. ஆனந்த குமாரசாமி [ஆசிறி வைத்தியசாலை, நாரேன்பிற்றியா] ஆகியோரின் அன்புத் தந்தையும், பாக்கியவதி, புஷ்பலீலா, இந்திராணி, சோதியாம்பாள், சர்வேஸ்வரி, மீனாம்பிகை [லண்டன்], யசோதா, கிஷ்ணகுமாரி ஆகியோரின் மாமனாரும், பவானி [கால்நடை வைத்தியர், கண்டி], பாமினி [யாழ். நுண்கலைப் பீடம்], பவானந்தன் [கனடா], அனுஷா [லண்டன்] அருட்குமார் [யாழ். மருத்துவ பீடம் 3 ஆம் வருடம்], அகிலா [யாழ். விஞ்ஞானபீடம் 1 ஆம் வருடம்], சித்திரா, சுரேஷ், சோதிகரன் [யாழ். இந்து], சுவர்ணசோதி, மாதங்கி, பிரதீபன், பிரசாந்தன், பிரசாந்தி, மனோநீதன் [லண்டன்], மைதிலி, பைரவி, அஜந்தன், அகல்யா, நிர்மலராஜா, [பொறியியலாளர்], ராஜேந்திரன் [லண்டன்] ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

தகவல்:

[21221] மு. பரஞ்சோதி [மகன்]

## ஆறுமுகம் நவரத்தினம்

புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் நவரத்தினம் ஜேர்மனியில் அகாலமரணமானார. அன்னார் மங்கயக்கரசி [கனகம்மா] வின் அன்புக் கணவரும் கலைச்செல்வி, சதீஸ்கரன், கலைமதி, கலைநிதி, கலைவாணி ஆகியோரின் அன்புத் தந்தையும், அமராவதி, வள்ளியம்மை, தெய்வானை, கனகமணி, அருமைநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நடராசா, மாணிக்கம் ஆகியோரின் அன்பு மருமகனும், சரவணமுத்து திருச்செல்வம், வைத்தீஸ்வரன், ராஜலக்ஷ்மி, சண்முகராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:

211, பிறவுன் றோட், யாழ்ப்பாணம்

திருமதி வைத்தீஸ்வரன்

[21220]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/1 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 02 - 06 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org